திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் பகுதியிலிருந்து ரேஷன் அரிசி ஆந்திரா பஸ் மூலமாக கடந்த பல மாதங்களாக கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. 2 டன் அரிசி பஸ்ஸிலிருந்து பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதேபோல், அரிசி எங்கிருந்து வாங்கினார்கள்; அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒட்டுமொத்தமாக பதில் சொல்வார்கள்.

(எ) தருமபுரி மாவட்டம், சேங்காடள்ளி கிராமத்திற்குள் அருந்ததியரும், கிருஷ்ணகிரி மாவட்டம், கல்கூர் கிராமக் கோயிலுக்குள் தலித் மக்களும் செல்ல முடியாததால் ஏற்பட்ட பதற்ற நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்கு உட்பட்ட கம்பையனூர் அடுத்த சேங்காடள்ளி கிராமத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக அருந்ததியர் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் தடுப்புச் சுவரை எழுப்பி, அந்த மக்கள் கிராமத்திற்குள் செல்ல முடியாமல் ஒரு தீண்டாமைச் சுவரை எழுப்பியிருக்கின்றார்கள். ஆகவே, அந்தச் சுவரை அகற்றுவதற்கு அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், கிருஷ்ணகிரி மாவட்டம் கல்கூர் என்ற கிராமத்தில் கோயிலுக்குள் தலித் மக்கள் உள்ளே செல்வதற்கு முற்பட்டபோது சாமியைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஆகவே, அங்கே உள்ளே செல்ல முடியாத ஒரு பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நீங்கள் என்னை இன்று காலையில் 9-15 மணிக்கு சந்தித்து இதுபற்றி ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.